## பத்திரிக்கை செய்தி

## ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களால் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பாகலூர் சாலையில் அமைந்துள்ள நல்லூர் போக்குவரத்து துறை சோதனைச் சாவடியில் நடத்தப்பட்ட திடீர் சோதனை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பாகலூர் சாலையில் அமைந்துள்ள நல்லூர் போக்குவரத்து துறை சோதனைச் சாவடியில் வரக்கூடிய வாகனங்களுக்கு கூடுதலாக பணம் வசூலிக்கப்படுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் இன்று 12.07.2024ம் தேதி காலை ஓசூர் பாகலூர் சாலையில் அமைந்துள்ள நல்லூர் போக்குவரத்து துறை சோதனைச் சாவடியில் கிருஷ்ணகிரி பிரிவு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து திடீர் சோதனை நடத்தப்பட்டது. சோதனையில் கணக்கில் வராத ரொக்கம் ரூ.2,89,500/- கைப்பற்றப்பட்டது.